Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

Advertising charges per line 10
do per half col Rs 3 00
do per Column 5 00

THE Hindu Organ

VOL 6. ௬-ம்புத்தகம். | JAFFNA, WEDNESDAY MARCH 6, 1895 | இந்துசாதனம். | கலியுகஞு ௪௯௯௬ ௧௮௧௫, மாசிமீ ௨௨. | NO 15. இலக் ௧௫.

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன்கிழமைகளிற் பிரசுரிக்கப்படும்.

ACKNOWLEDGMENT.

The Manager of the Hindu Organ begs to acknowledge with thanks the receipt of the following remittances from subscribers:—

Messrs.		Rs.C,
V. Chuppiramania Pillai...	(Trinco)	2-00
S. Chellappah Pillai...	(Kandy)	2-00
V. Chellappah Pillai...	(Pussallawa)	1-50
Arthur Alvis...	(Colombo)	4-25
M. Wadiwail Pillai...	(Maskeliya)	2-00
A. Chuppiah Pillai...	(S. Manippay)	1-00
Vellikilamai Mada Vidhiasalai...	(Do)	-25
S. Ponniah...	(Cambar)	1-12½
N. Chuppiramaniam...	(Ehiriancumbra)	1-00
W. Ponnampalam...	(Pandarawella)	2 00
N. Thillaiampalam...	(Nalloor)	1-50
T. Chathasivam...	Do	1-50
S. Chellappah...	Do	-50
T. Chivappiragasa Pillai......	Van-West	4-50
M. Chapapathy...	Tangalle	2-00
G. A. Van-Houten...	Jaffna	3-00
A. V. Chuvaminadha Pillai...	Trinco	2-09
S. Chellappah Pillai...	Colombo	2-50
V. Viswanather...	Lunugalla	2-00
C. vallipuram Pillai...	Trinco	2-00
Chit: Kailasa Pillai...	Colombo	4-00
Honble. P. Coomarasamy Mudr...	do	4-00
N. Vaithialingam...	Shuthumalai	1-50
M. Ponnuchamy...	Mannar	2-00

NOTICE.

IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI.

Testamentary Jurisdiction } No 652.

In the Matter of the Estate of the late Thaivanaippllai widow of Santhirasekarer of Munthuvil. Deceased

Thiyager Vaitilingam of Munthuvil. Petitioner

1. Arumugam Santhirasekarer of Munthuvil
2. Vallippillai widow of Thiyager of do

Respondents.

This matter of the Petition of Thiyager Vaitilingam of Munthuvil praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Thaivanaippillai wife of Santhirasekarer of Manthuvil coming on for disposal before H. Nevill Esquire, District Judge, on the 4th day of February 1895 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 1st day of February 1895 having been read' it is declared that the Petitioner is one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 11th day of March 1895 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 4th day of February 1895.

Sigd H. Nevill
District Judge.

THE HINDU ORGAN.

:o:

JAFFNA, WEDNESDAY MARCH 6, 1895.

THE LIBEL CASE

The case of criminal libel against the Very Rev. Father Mauroit and Katigaser Andrew, the Proprietor, and the Printer and Publisher, respectively of the Jaffna "Catholic Guardian," which was at our instance committed for trial before the Supreme Court, and which was the all-absorbing topic of discussion among all classes of people here for some months past, resulted on the 26th Ultimo in the acquittal of the accused. The verdict of the special Jury which tried this case is generally disapproved of by all right-thinking persons who listened to the evidence and understood the summing-up of His Lordship the presiding Judge. The defamatory nature of the words complained of against the Editor of the Hindu Organ was not denied by the defence, nor was any attempt made to justify the libel. It was not denied that the complainant in this case was the Editor of the Hindu Organ. It was also proved by the Declaration made by the accused, a certified copy of which was produced in evidence, that the first accused was the Proprietor of the Guardian and the second accused the Printer and Publisher of that Paper. This was admitted by the accused in their statements, although Father Mauroit pleaded that he was only the nominal Proprietor for the Mission, and Andrew excused himself by saying that he published the article complained of not knowing that it was a libel, as he could not read and write the English language. The law as to the criminal liability of the Printer and Publisher is beyond all manner of doubt; and the Proprietor also is criminally responsible unless it is proved that he exercised proper care and caution in the management of his paper. And Father Mauroit's statement went to show that he was grossly negligent in the management of the Guardian, which he undertook in his Declaration to "print and publish as Proprietor." It was a startling proposition, as his Lordship Mr. Justice Withers observed, that the Printer and Publisher of a newspaper should have come forward and stated that he was ignorant of the language in which he published the libel. The Declaration is intended by law to hold the makers of it responsible for any libellous matter appearing in their paper. The acquittal of both the Proprietor and the Printer of the "Jaffna Catholic Guardian" by the Special Jury composed of six Europeans, two Tamils, and one Mahommedan shows that no value is hereafter to be attached to the Declaration which is required by Ordinance No 5 of 1839 to be made before a news paper is printed and published in Ceylon.

It is possible that the Jury were influenced by the specious arguments of the learned Counsel for the defence to the effect that the accused never meant to harm the reputation of the complainant who was not known to them as Editor of the Hindu Organ, and that the word "pettifogger" in the last paragraph of the article complained of showed that it referred to a lawyer and not to the complainant who is a layman. It was not disputed, as we said before, that the Guardian libelled the Editor of the "Hindu Organ," whom it particularized as "the present Editor of the Hindu Organ," and the imputations against whom were on one occasion printed in capital letters and on another in italics; and any imputations against him, whether the terms applied were appropriate or not, must refer to the person who was at that time Editor of this paper. A libel is a libel whether it was on the complainant or somebody else. The imputations being against the Editor of the "Hindu Organ," and the complainant in this case and no other being that Editor, the person defamed was therefore no other than the complainant himself. If A mistakes B for C. and murders B, will law or equity condone A's guilt? The article in the Guardian complained of as defamatory, if read as a whole, will also show that the word 'pettifogger" was metaphorically used, as we stated in our evidence, to imply that the Editor of this paper pleaded the cause of the chetties as a pettifogger. We therefore say that the verdict of the Jury cannot be defended on this ground also.

In order to bring about the transfer of this case to Colombo the accused solemnly swore an affidavit to the effect that the vast majority of the jurors who would try them in Jaffna would be Hindus and that they could not have a fair and impartial trial here. But experience has proved that it was possible to have a panel composed almost exclusively of non-Hindus. According to the list published in the Government Gazette of the 8th ultimo, half the number of Special Jurors for Jaffna are Hindus, yet there were only six Hindus out of the eighteen jurors cited to try this case. With four jurors challenged on each side, the jury before whom this case went was composed of only one Hindu who is an officer of the Jaffna Kachcheri, one Madommedan who is also a Kachcheri Officer, and seven Christians. We allude to these facts simply to shew that the alarm raised by the accused as to the predominence of the Hindus in the jury box was without any just cause or foundation, and tended greatly to prejudice the prosecution in the eyes of the Christian public.

It cannot be denied, even by our opponents, that morally the victory is ours and that the Guardian has not come out of the prosecution with flying colours. False imputations having been made and reiterated against us, in the columns of the Guardian, we were obliged to criminally prosecute the person whom we at that time believed to be its Editor, and its registered printer and publisher. Having had no wish or inclination to resort to unfair means in proving our case, we cited the Proprietor, Manager, and other persons on the staff of the "Guardian" as our witnesses, in the belief that either their evidence would lead to the detection and punishment of the actual writer of the scurrilous article complained of, or some settlement would be come to by the unqualified withdrawal of the imputations against us on the part of the Guardian. Any one with a shred of manliness, or sense of justice and fairplay about him will agree with us that the Guardian should have either apologised to us for the wrong it has done us, or the writer of the article should have come forward and justified his imputations. Neither the one nor the other was done. On the 17th October last when the case first came on for investigation in the Police Court, a settlement was proposed and we obtained a postponement for the 24th of that month, on the understanding that a retraction of the imputations would be published in the 'Guardian" of the 20th of that month, and that we should, if that be done, withdraw our case. No retraction was, however, published, and on the 24th the inquiry went on. Father Mauroit, the Proprietor, whom we called as our first witness deposed that Father Dunne who was then the first accused was not the Editor of the "Guardian," although there was a notification in the "Guardian" of the 20th February 1892 which had never been subsequently cancelled to the effect that he (Father Dunne) was appointed Editor of that paper. He further stated that Mr James H Martyn was the Editor since June 1892, that he did not know who wrote the article in question, and that he did not even care to ascertain who wrote it. Mr. James Martyn while admitting that he was Editor, denied that he wrote the article in question, being then on sick leave. Father Delpech, the Manager of the 'Guardian" who was examined on the 5th November stated that Mr. John Martyn, brother of Mr. James Martyn, was the acting Editor and Father Mauroit acting Manager at the time the libellous article appeard. But Mr. John Martyn came and deposed that he did not write the article, nor did he know who wrote it. Even the compositor whom we called as a witness would not give any clue as to the writer of the article in question.

உ
கணபதி துணை.

வாழ்கவந்தணர்வானவரானினம்................ •
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக........... •
ஆழ்கதீயதெல்லாமரனாமமே.................. •
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே................ •

விளம்பரம்

சைவப்பிரசங்கம்.

௩-வ வெ- சங்கானை மேற்கிலும்.
௪-வ ச- இளவாலையிலும்.
௫-வ ஞா-கோட்டையிலும். காச்சிமார்கோயிலடியி
௬-வ தி-மானிப்பாய் வெள்ளிக்கிழமைமடத்திலும்.
௧௯-வ- ஞா கோட்டையிலும், ஐயனார்கோயிலடியி
௨௦-வ தி- வீமன்காமத்திலும்.
௨௧-வ செ- மல்லாகம இங்கிலீசுவித்தியாசாலையி
௨௨-வ- பு- அளவெட்டியிலும்.
௨௪-வ, ௨௫-வ, ௨௬-வ } காரைதீவிலும்
௨௭-வ தி- வண்ணார்பண்ணையிலும்.
ஸ்ரீமத் சு. ஏரம்பையரவர்களாற்செய்யப்படும்.

THE HINDU FAMILY PROVISION FUND
WANTED:—4000 SUBSCRIBERS WITHIN MARCH 1895.

இந்துகுடும்பநிதி.

செல்வர்களுக்கும ஏழைகளுக்கும் சுவல்பசந்தாதான்.
தாமதம்வேண்டாம்!
தாமதம்வேண்டாம்!!
எவ்விதத்திலும் லாபம் உள்ளது.
இந்நிதிக்கு மெம்பர்களாகும்விதம்

திரிச்சிராப்பள்ளியில் காளயு௵ வைகாசி௴ முதல்பிரசுரமாகிற இந்துமதாபிமானி வாரத்தமிழ்ப்பத்திரிகைக்கு வருஷம் ௧-க்கு ரூபா ௪—௪—௦ முன்பணம்செலுத்தி சந்தாதாரர்களாவோர்களை, இந்நிதிக்கு மெம்பர்களாகச்சேர்க்கப்படும்.

கெவனிப்பு! கெவனிப்பு!!

இந்துமதாபிமானிபத்திரிகைக்கு ௫௦௦௦ கிரந்தர கையொப்பங்கள் சேர்ந்தவுடன் ரூபா ௪௫௦௦ஐ கை யொப்பத் தொகையிலிருந்து மீறற, "இந்து குடும்பநிதி" யாகவைக்கப்படும். ௧௮௯௯ ம் ௵ ஜனவரி௴ ௨௧ க்குள் ஷை ௫௦௦௦ சந்தாதாரர்களில் யாராவது ஒருவர் காலஞ்செல்ல நேரிட்டால் இவர்களுடைய குடும்பத்துக்கு இந்துகுடும்ப நிதி" ரூபா ௪௫௦௦ஐ வருஷக் கடைசியில் கொடுக்கப்படும ஒருக்கால் ௫ பேர்கள் காலஞ்சென்றால் அந்நிதி ரூபா ௪௫௦௦ஐ சமமாகக் காலஞ்சென்ற ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூபா ௯௦௦ ஆக கொடுக்கப்படும்.

இந்த இந்து குடும்பநிதியானது ௧௦௦௦ சந்தாதாரர்களுக்கு ரூபா ௯௦௦ விழுக்காடு ஜாஸ்தியாகவும குறைவாகவும் ஏற்படும்.

உதாரணமாக:—௧௦௦௦ சந்தாதார்களிருந்தால் இந்து குடும்பநிதி ரூபா ௯௦௦ ஏற்படும்.

௨௦௦௦	ஷை	௧௮௦௦	ஷை
௩௦௦௦	ஷை	௨௭௦௦	ஷை
௬௦௦௦	ஷை	௫௪௦௦	ஷை
௯௫௦௦	ஷை	௪௮௦௦	ஷை

இந்தமாதிரி இந்நிதி ஜாஸ்தியாகும்.

☞ இதைப்பற்றி முத்திரைக் கடிதத்தில்ரிஜிஸ்டர்செய்வித்து அதன்நகலை அனுஸடாம்பில் குறித்து தஸ்தாவேஜாக எல்லாச்சந்தாதார்களுக்குமனுப்பப்படும்.

விபரமறியவிரும்புவோர் அடியில்கண்டவிலாசத்திற்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

தெப்பகுளம் P. O. } மானேஜர்
திருச்சினப்பள்ளி } இந்துமதாபிமானி ஆபீஸ்.

விவேகசுந்தரம்.

சிறுவர்களுக்கும் கல்விமான்களுக்கும் ஏனையோருக்கும் அதிவிருப்பத்தைக்கொடுக்கக்கூடிய புத்தி விருத்திக்கேற்ற அநேக நல்லவிஷயங்களை அடக்கிய இம்மாதாந்தப் பத்திரிகை சென்னை தம்புச்செட்டிவீதி ௨௫௫ ம நம்பர்வீட்டில் ஸ்ரீ. சை. ர. நமசிவாயச்செட்டியாரால் பிரசுரிக்கப்பெற்று வெளிவந்தது. இலங்கைவாசியார் வருஷம் ௧-க்கு ரூபா ௩. தியார்தாவாசியோர் ரூபா ௪௰ முற்பண மனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இது டெமி-அ பக்கங்கொண்ட ௪ பாரமடங்கிய புத்தகரூபமே. நமக்கனுப்பிய பிரதியை மகிழ்வுடனேற்று நாமுமனுப்பிவருவோம்.

விளம்பரம்.

ஸ்ரீமத். சங். இரகுநாத ஐயர் சோதிடபரிபாலன மடத்து மன்மதவருஷ "வாக்கியபஞ்சாங்கம்" வேலைமுடிந்து விற்கின்றோம். ஏனையவருஷங்களினும் இவ்வருஷம் விசேஷவிஷயங்கள் பல கூட்டியிருக்கின்றோம்.

இங்ஙனம்
கொக்குவில் ச. இ. சிவராமலிங்கஐயர்

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்; ஜய௵ மாசி௴ ௨௪௳.

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு.
கத்தோலிக்குப்பாதுகாவலன் வழக்கு.

சுப்பிறீங்கோட்டுநீதிபதி கௌரவ உவிதஸ் துரையும், கிறௌன் கவுன்சில்மெஸ். டயசும், றிஜிஸ்டார் கிறினியரும் பிறரும் இந்தப்பிவர்வரி௴ காலையில் இங்குவந்திறங்கி அடுத்தநாள் கிறிமினல் விசாரணை ஆரம்பித்தனர். இம்முறை விசாரிக்கப்படவேண்டியிருந்த வழக்கு இந்துசாதன பத்திராதிபர் ஸ்ரீ. அ. சபாபதிப்பிள்ளை கத்தோலிக்குப் பாதுகாவல பத்திரிகையின் உடையவராகிய பாதர். மொறுவாமேலும பிரசாஞ்செய்யும் அந்நிறமேலும் தொடுத்த மானபங்க வழக்கொன்றேயாம. இவ்வழக்கின் ஆதிமூலம் இதுவென்பது முன் இப்பத்திரிகைகளிற் பேசப்பட்டிருக்கின்றது இதில் வழக்குக்கு ஏதுவாயிருந்த விஷயம் "இந்துசாதன பத்திராதிபர் பிரசித்திபெற்ற பொய்யர்" என்று பாதுகாவலபத்திரிகை பேசியதேயாம். வழக்குக்கிடனான இவ்விஷயம் எழுதினவர் யாரென்பதைப் பாதுகாவலபத்திரிகையின் உடையவர் பத்திராதிபர்கள் மானேசர் பிரசாஞ்செய்பவர் அச்சடிக்குபவர்கள் முதலானவருந் தங்களுக்குத் தெரியாது என்றுவிட்டனர். அதனால் டண்ணைபவர்மேல் முதலில்தொடுக்கப்பட்ட இவ்வழக்குத் தள்ளுப்பட உடையவராகிய ஆமொறுவாமேல் பின் தொடுக்கப்பட்டது.

இவ்வழக்கை விசாரிப்பதற்காக நூன்பது விசேஷயூரிமார்வரிக்கப்பட்டார். இவருள் ஆறுபேர் ஐரோப்பியர், மூன்றுபேர் சுதேசிகள்; இவ் வொன்பதின்மருள் ஏழுபேர்கிறிஸ்தவர்; ஒருவர்மகமதியர், ஒருவர்சைவர்.

'கிறௌன் கவுன்சி'லாகிய டயஸ், முன்முன்னுள்ள பத்திரிகைகளில் பாதுகாவல பத்திராதிபர் இந்துசாதனபத்திராதிபரைப் பொய்யரென்று பேசியிருக்கிறோமென்று இங்கேதொடர்புபடுத்திச் சொன்னவைகளையெல்லாம் யூரிமாருக்கு நன்றாகவிளக்கிக்காட்டித் தம வழக்கை ஆரம்பித்தனர். ஸ்ரீ. சபாபதியே இந்துசாதன பத்திரிகையின் இங்கிலிசுப பாகங்களுக்கு அதிபரென்பதை நன்றாக ஒப்பனைசெயதனர். பாதர். மொறுவா கத்தோலிக்குப் பாதுகாவலனின் உடையவரென்பதையும் அந்நற அதனைப்பிரசரிப்பவரென்பதையும் ஒப்பித்தனர்.

வாய்ப்பிறப்பில், மொறுவா, தாம்பேரளவில் சொந்தக்காரனேயல்லாமல் உண்மையளவில் சொந்தக்காரனல்லரென்றும், பத்திராதிபருக்கும தமக்கும் யாதுந் தொடர்பில்லையென்றும்; அந்நற தனக்கு இங்கிலிசு தெரியாதென்றும் அச்சிடப்பட்டதின்னதெனபது தனக்குத் தெரியாது என்றும், சொல்லிக்கொண்டார்கள்.

இவ்வழக்கில் எதிரிகளுக்காக அப்புக்காத்து டன் கோஸ்து எனபவர், சபாபயோ, பர்க்கது, சேனாதிராசா என்னும்மூன்று அப்புக்காத்துமாருடைய உதவிபெற்று எழுந்து வாதித்தனர். அவர் தம்முடையகட்சிக்காகச் சாட்சிகளை கூப்பிடவில்லை. அவர், இந்துசாதன பத்திராதிபர் பொய்யர் என்று எதிரிகள் எழுதியதை ஆணைமையோடும வெளிப்பட்டு ஒப்பனைசெய்துவிட்டு அவர்களைமீட்கவில்லை. அதுமாத்திரமன்றி ஸ்ரீ. சபாபதி நல்ல யோக்கியரென்று தம்மனதிற் பட்டிருக்கிறதென்றும் சொன்னார். பின் அவர் கொண்டுவந்துவிட்டநியாயம் "பொய்யர்" என்றது அங்கே இந்துசாதன பத்திராதிபராகிய சபாபதியைக்குறித்ததன்று வேறு ஒருவரைக்குறித்தது என்பதேயாம்.

நீதிபதி எல்லாவற்றையுங்கேட்டுக்கொண்டு, தாம்திரட்டிச்சொல்லும்போது எதிரிகளைக் குற்றவாளிகளாக்கும் நோக்கமாகப் பேசிமுடித்தனர். முடிந்தவுடன் யூரிமார்போய் ஆலோசித்துவந்து எதிரிகளிருவரும் சுத்தவாளிகளேயென்று தீர்ப்புச்செய்தனர்.

இந்துசாதனபத்திரிகையின் அதிபர், ஸ்ரீ. சபாபதியென்பது, இந்துசாதனபத்திரிகையை வாசிக்கும்ஆயிரமான சனங்களெல்லாருக்குந் தெரியும். சைவபரிபாலனசபையைச் சேர்ந்தவர்களெல்லாருக்குந் தெரியும். அவரை நேரேபார்த்து உம்மைப்பற்றிப்பாதுகாவல பத்திரிகையில்எழுதப்பட்டிருக்கின்றதேயென்றுகேட்ட பலருக்குத்தெரியும். இந்துசாதனபத்திராதிபர் சபாபதியென்பது நன்றாகச் சாட்சிகளால் தம்முன்னர் ஸதாபிக்கப்பட்டிருக்கவும், "இந்துசாதன பத்திராதிபர் பிரசித்தமானபொய்யர்" என்றுசொன்னது வேறொருவரைக் குறித்துச் சொல்லப்பட்டது அதனால் சபாபதிக்கு மானபங்கமில்லையென்று டன்கோஸ்து சொல்ல அதைக்கேட்ட வளவில் சரிதான் எதிரிகள் சுத்தவாளிகளென்று யூரிமார் தீர்ப்பிட்டனர். இவர்கள் இந்தத் தீர்ப்பையே எப்பொழுதுஞ் செய்வார்களென்ற நிச்சயம் தெரிந்தால் பத்திரிகைகளில் எவரையும் வேண்டியபடி வைதுகொள்ளலாமே. பாதுகாவலனைச் சேர்ந்தவர்களன்றி மற்றவர்களுக்கு அருணாசலம் சபாபதியே இந்துசாதன பத்திராதிபரெனறு அறியக்கூடியதாயிருந்தும் Peitefogger என்றதினால் இது சபாபதியைக் குறித்ததன்றென்று அதனைஎழுதினவர்சொல்ல, அவருடைய வாய்ச்சொல்லைக்கேட்டு சுத்தவாளியென்ற தீர்ப்பு எக்காலத்தும் எவ்விடத்துமசயமுற்று வாழுக வாழுக.

இனி பாதர் மொறுவா தான் பெயர்மாத்திரத்திற் சொந்தக்காரனேயன்றி வேறெனக்கொன்றுமில்லை தான்பத்திராதிபரை நியமிக்கவுமில்லை யென்றனர். இது எவ்வளவு பரிகாசத்துக் கிடனாயிருக்கின்றது. தாம சொந்தக்காரராம் தமக்கொன்றுந்தெரியாதாம்! இந்தப்புண்ணியவாளன் தாம் சொந்தக்காரனென் றிருக்க உடன்படமாட்டோமென்று முன்னேறவே சொல்லிவிட்டால், வேறொருவரிருந்து இவ்வளவுகலகங்களை உண்டாக விடமாட்டாரோ. அந்நிரோசு தமக்கு இங்கிலிசு தெரியாதாம். ஆதலால் தாம் குற்றவாளியல்லராம்! ஆனலிவர் ஏன் இங்கிலிசுப்பத்திரிகைக்குப் பிரசாம் செய்பவர்ஆனாரோ அறியோம். சட்டத்தைச்சட்டமெனக்குத்தெரியாது என்று ஒருவன் சொன்னால் அவன் செய்தகுற்றத்தை நீதிபதி மன்னிப்பாரா!

இது மைசூர் மகாராஜாவாகிய சாமராஜேந்திரர் உடையாரது உருவப்படம. இவர் ௧௮௬௩ ம ௵ பிறந்து ௧௮௭௮ ம் ௵ மணம்புரிந்து ௧௮௮௧ ம் ௵ பட்டாபிஷேகம்பெற்றுச் சென்றமார்கழியாசத்திமல தேகவியோகமாயினர். இவருடைய அரசியலை ஆங்கிலேயர் மிகப்பாராட்டுவர், இவருடைய செங்கோலுக்கமைந்த ஐந்துகோடி பிரசைகளுக்கும் இவர்மெய்யன்புடைய பிதாவைப்போன்றவர். இராச்சியதந்திரத்தில் மகாமதியூகி; குணத்தினால் தருமனையும அழகினால் அர்ச்சுனனையும் ஒத்தவர். இங்கிலீஸ் கன்னடம் சமஸ்கிருதம் என்னும்பாஷைகளில் சதுரர் சுயபாஷை, சுயமதம், சுயஜாதி என்னுமிந்தொடர்புகளிலே மிக்கஅபிமானமுடையர். குடிகளைவருத்தாது தண்ணளியோடரசுபுரிந்தவரசர் இவர்காலத்திற் பிறரில்லையென்னலாம். இவர்சென்றகார்த்திகைமாசம் தமது மூத்தபுத்ரியாருக்கு ஒருவரைத் தேடுமாறும் கவர்னர்ஜெனரலைக்காணுமாறும் கல்கத்தாவுக்குச்சென்றவிடத்தில் அங்கே கண்டமாலையால் பீடிக்கப்பட்டு மார்கழிமாசத்திலேதேகவியோகமாயினர் இவர்மரணத்தைக்குறித்து இந்தியாமுழுதுமேபரிதபிப்பதாயிற்றென்றால் இவராண்டதேசம் என்படாதென்பதுசொல்லவும் வேண்டுமோ. இறந்தாரென்பதுகேட்டமைசூர்நகரார் ராஜமாளிகையைச்சூழ்ந்துநின்று வயிறலைத்தழுதழுதேங்கிப் புரண்டகாட்சிபரிதாபமானதொன்றாயிருந்ததென்றுசென்னைப்பத்திரங்கள்கூறின. இவருக்குஇரண்டுபுத்திரரும் மூன்றுபுத்திரிகளுமுளர். மூத்தபுத்திரருக்கு வயசுபத்து இப்புத்திரர்பெயர் கிருஷ்ணராஜா இவருக்குஇப்போதுபட்டாபிஷேகமாயிற்று.பராயமவருங்காறும் இவர்தாயாராகிய வாணிவிலாசபிராட்டியாரே இராச்சியபாரத்தை நடாத்துவர். இவருடையபோட்டோகிரப்படம் வேண்டுவோர் வாட்அண்டேவிஷாப்பில்பெற்றுக்கொள்ளலாம் விலை சதம் ௬௫.

வைதிகசைவசுத்தாத்துவித

சைவ சித்தாந்த சமயம்.

(௫௫-ம் பக்கத்தொடர்)

சுத்தாத்துவிதம்.

௯௧. சென்னையினின்றும் முன்னர்ப்போந்த "வேதாந்த சங்கைநிவாரணம்" "சித்தாந்திகளும் ஏகான்மவாதிகளே" "சங்கராசாரியர் அவதாரமகிமை" என்பவற்றோடு, "பதி பசு பாசவாதம்" "துவிதசைவரேமாயாவாதிகள்" "தத்துவவாதம்" "அத்வைத தூஷணபரிகாரம்" முதலிய புஸ்தகங்களையும் இப்போது யாரோ ஒருவராயோ, பலராயோ, ஒருவரே பலராயோ "ஓர் சைவன்" என்றும், "வேதாந்தி" என்றும், 'அத்வித சித்தாந்தி" என்றும், "ஆரியன்" என்றும், "தத்துவ விசாரணை புரிவோன்" என்றும் பெயர்கள் பூண்டு வைதிகசைவ சுத்தாத்துவித சைவசித்தாந்தநெறியை ஆபாசநெறியதென்றும் தாழ்ந்தநெறியதென்றும் நன்கெடுத்துரைத்தற்கும் எழுதுதற்கும் நமது வாயும் கையும் கூசத்தகும் அத்துணை வறுமொழிகொண்டும் குறுமொழிகொண்டுஞ் சிவபிரானையும், சிவாசாரியரையும், சிவசாஸ்திரங்களையும் இழித்துக கூறுதலாம் அதிபாதகத்தொழின்மை பூண்டாரால்; அவர்வசப்பட்டு மந்தபுத்தியுடையார் மருளாவண்ணம் சிறிது சமாதானங் கூறப்புகுந்தேம். அங்ஙனம புகுங்கால் முன்னர்க் கூறியவாறு வேதமுதலிய பதினெட்டு வித்தைகளுக்கும் கர்த்தா சிவபெருமானேயாமாதலினாலும், "அத்வைதிகள் வேதமுதலிய பதினான்கு பிரமாணங்களுக்குக் கட்டுப்பட்டொழுகினோர்கள்" என்றும், "அவைகளுக்கு இம்மிகூட மீறிநடக்கவில்லை" என்றும், "இந்து" என்பார் தமது "அத்வைததூஷணபரிகார" முதலிய பிரதிகள் வாயிலாகவும், "புராணம் என்பது பதினெண்வித்தைகளுள் ஒன்று என்றும், அது இப்பரதகண்டத்திலுள்ள வைதிகரனைவராலும் ஒருமனதாக வேதங்களைப் பொருள்செய்தற்குக் கருவியென ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும், தத்துவம் எளிதில் விளங்கப் புராணங்கள் பரமகிருபாநிதியாகிய பரமனால் இயற்றப்பட்டன என்பது பல இருஷிகள் கருத்தாம் என்றும், குறைந்த அறிவுடைய ஒருவனைக் கண்டவேதம் நம்மை இவன் வேறுபொருள்படுத்திக் கெடுப்பான் என்று நடுங்கும்; அப்படிக் கெடுக்காது இதிகாசங்களையும்புராணங்களையுந் துணைநூலாகக்கொண்டு வேதங்களைப் பொருள்படுத்துக என்றும், புரா

ணங்கள் ஐந்தாம் வேதங்களுக்கு ஒப்பாவன என்று சாந்தோக்யோப நிடதமுதலிய உபநிடதங்களிற் கூறப்பட்டமைபற்றி அவற்றை அப்பிரமாணமெனக்கொண்டால்தாம் வேறொருவழியினும் வேதங்களைப் பொருள்படுத்தத் தகுந்த கருவிகளை கண்டெடுப்பது அரிய தாயவிடும் என்றும், அதுகொண்டே வேதவியாசமுனிவர் தாமருளிய பாரதமுதலியவற்றில் "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ருஹ்மயேத்" என்றும், சிதம்பரம் பிரமவித்தியாப் பத்திராதிபர் கஅஅ௪ம் வருஷத்து அக்டோபர்மாசம் ௩௦ உ பிரமவித்தியாப் பத்திரிகைவாயிலாகவும். "புராணரக்ஷா" என்னும் புஸ்தகவாயிலாகவும் அறிவுறுத்தின்றமையாலும், நாமும் இந்தவேதபுராணங்களையே சிறந்த பிரமாணமாகக்கொண்டு நமது கொள்கையை நிறுத்துவோமாயினம்.

௬௨ "ஏகமாம அத்துவிதம் முன்னிருந்தது" என்றும், "ஏகமாம் ஆன்மா முன்னிருந்தது" என்றும் உபநிஷதங்கள் இசைவுற இசைத்தலால், "அத்துவிதம்" என்னும் பதமும "ஆன்மா" என்னும் பதமும ஒரே பொருள்பட்டுப் பரமான்மபரப்பிரமத்தை உணர்த்தினவாம். இதுகொண்டே காளிதாசப் பெருங்கவியாரும தமது குமாரசம்பவ இரண்டாஞ் சர்க்கத்து நான்காஞ்சுலோகத்திலே சிருஷ்டிக்குமுன்னே "கேவலான்மா" இருந்ததென்று கூறினார். இவ்வாறே சுருதிபுராண முதலியவைகளிலே பெரியோர் வழங்கியபொருளமைதியை நோக்கி அவற்றைத் தொகுத்துப் பொருள்விளக்க வேண்டியன்றோ மேதினிகோசமுதலான பிறவெல்லாம் எழுந்தனவாம். கோல்புருக் (Colebrooke) என்னும் அங்கிலேயபண்டிதர் எழுதியவாற்றால் அமரகோசமியற்றிய அமரசிம்மர் என்பார் இற்றைக்கு எண்ணூறு வருஷங்களுக்குமுன்னே விக்கிரமாதித்தன் காலத்திலே இருந்தாராகப் புலப்படுகின்றது. இந்தஅமர சிம்மர் இயற்றிய அமரகோசத்தில்லே "ஏகம்" என்னும் பதம முக்கியம் (chief), அந்நியம (other), கேவலம் (alone) என்னும் மூன்று பொருளில செல்வதாகச் சொல்லப்பட்டது. படவே, "முக்கியம்" என்றதேனும் "பரமம்" என்றதேனும் விசிஷ்டத்தின் மேலும், "அந்நிய" என்றது இதரத்தின்மேலாய் (இரண்டின்) துவிதத்தின்மேலும், "கேவலம" என்றது சப்தகற்பதருமத்தினுலும் சாங்கிய காரிகையினுலும சுத்தத்தின்மேலும் சேறலால்,

ஆத்மாவாவிதமேகவேவாக்ர ஆசீத்।

என்ற பிருகதாரணிய உபநிஷத் யந்தாநகண்டுகாளிதாசர் ஆன்மா என்னும பதத்துக்கு முன்னே "கேவலம்" என்னும பதத்தை நிறுத்தி முன்னர்க்கூறியவாறு "கேவலான்மா" என்றாரம்பால,

ஏகமேவாத்துவிதீயம்।

என்னுஞ் சாந்தோக்யோபநிடதத்து மந்திரங்கண்டு, அத்துவிதம என்னும் பதத்திற்குமுன்னே முன்னாக கூறிய "ஏகம்" என்னும பதத்தின்பிரதிபதங்களாகிய "விசிஷ்டம", "துவிதம", "கேவலம்", "சுத்தம்", "பரமம" என்பனவற்றைக் கூட்டிச் சிவாத்துவிதிகண்முதலாயினோர் விசிட்டாத்துவிதம், துவிதாத்துவிதம, கேவலாத்துவிதம், சுத்தாத்துவிதம, பரமாத்வைதம என்னும்பெயர்களைப் பூணசேர்ந்தார்கள். மாண்டூக்யோபநிடதத்திலே,

சிவோ அத்வைத।

என்றுகாணப்படுதல்கண்டு, சிவம என்பது சுத்தமெனப் பொருள்படுதலால் சுத்தாத்வைதமென்று கொண்டாரென்று கூறுதலுமாம. "எந்த உபநிடதங்களிலேனும் அத்துவிதம என்னுந் தனிச்சொல்லே வழங்கப்படுகின்றதன்றும், அசசொல்லையே பலபுராணங்களும் வேதங்களுக்குப் பொருளுரைக்குமிடமெல்லாம உபயோகிக்கின்றனவேயன்றி எங்கும் அத்துவிதமென்னுஞ் சொல்லுக்கு முன்னும பின்னும் ஒரு வாலடை வைத்துரைப்பதில்லை என்றும, இடைக்காலத்தே இம்மதங்களெல்லாம் சில நூற்றாண்டினுள்ளே தோன்றினவாகையால், அக்காலத்து ஆசாரியர் முன்மதங்களினும பின்மதங்களை வேறுபடுத்தவேண்டித் தாங்கொண்ட பொருளுக்கிணங்கப் பெயரிட்டுக்கொண்டார் என்றும், அங்ஙனமின்றி மேற்கூறிய அத்துவிதத் தனிச்சொல்லன்றி எந்த உபநிடதத்திலேனும், மற்றைய புராணங்களிலேனும் காளிதாசர்முதலிய பழைய கவிகள் வழக்கிலேனும் எவராயினும "விசிட்டாத்துவித" முதலிய சொற்களைக்காட்டுவாரேல் தாம அம்மதங்களை அநாதிமதங்களெனக்கொண்டு, அங்ஙனம காட்டுமவரிடத்தே அவர்மதத்துள் ஆசங்கைகளைக் கேட்டொழிப்பேம் என்ற பிரமவித்தியாப் பத்திராதிபர் நந்தனவருஷச் சித்திரைமாச ௩௨௨ பிரமவித்தியாப் பத்திரிகை வாயிலாகக் கூறுவாராக, அத்துவித சித்தாந்தியாரும் "சுருதிமுதலிய வித்தைகளிலே அத்துவிதம என்று மாத்திரம சொல்லப்படுவதேயன்றி, வேறுவிதமாக அந்த அத்துவிதம இந்த அத்துவிதம என்றுபேசப்படவில்லை என்றும், 'சுத்தாத்துவிதிகள்' என்பது புதுப்பெயராமென்றும, "வேதாந்தசங்கை நிவாரணம் வாயிலாக மொழிகின்றாராதலின், அவ்விருவரும் "சுத்தாத்துவிதம" என்னும்பதம மண்டலப் பிராமணேப நிடதத்து இரண்டாவது பிராமணத்திலும, "விசிட்டாத்துவிதம்" என்னும் பதம் ஸ்காந்த புராண சங்கர சங்கிதையிற்போந்த உபதேச காண்டத்து எண்பத்துமூன்றும் அத்தியாயத்து நூற்றெழுபத்துமூன்றுஞ் சுலோகத்திலும, "சிவாத்துவிதம்" "அத்வைதசைவம" என்னும் பதங்கள் கைலாசசங்கிதை பத்தாம் அத்தியாயத்துத் தொண்ணூற்றொன்றும், நூற்றறுபத்தாறும், நூற்றுத்தொண்ணூற்றொன்பதாம் சுலோகங்களினும், "பரமாத்வைதம" (விசிஷ்டாத்வைதம்) என்னும் பதம் சூதசங்கிதையின் பிரமகீதை சூதகீதைகளிலே சாமான்னியமாய் அநேக சுலோகங்களினும் கருடபுராணத்திலும் பிரயோகிக்கப்பட்டிருத்தல் கண்டுங்கேட்டும உணர்ந்து இனிச்சமஸ்த நூல்களையும் ஆராயாது கேர்ந்த கேர்ந்தபடி நினைத்தலுஞ் சொல்வதும் எழுதுவதும் ஒழிந்து, "கல்லாத மேற்கொண்டொழுகல் கசடற-வல்லதூஉமையந்தரும்" என்னும் முதுமொழியை எக்காலமும் மொழிந்து அஞ்சி ஒடுங்குவாராக.

சமாசாரம்.

காலநிலை:—வெயிலின் அகோரஞ்சகிக்கத்தக்கதே. மழையில்லை. சிறுதானியங்கள் பயிரிடுவதற்காகக் கமக்காரர் வருணசெபமபண்ணுகின்றார்கள்.

இந்துஹைஸ்கூல்.—சை. ப. சபையாருடைய இப்பெரிய பள்ளிக்கூடத்துக்கு உதவிசெய்ய அரசினர் உடன்பட்டுக்கொண்டார்கள்.

டிஸ்திறிக்ட் நீதிபதி:—மெஸ். நெவில் இரண்டு வாரலீவில் கொழும்புக்குப் போய்விட்டார். மெஸ் T. M. தம்பு பிறக்கிறாசியார் அவ்விடத்துக்கு அது வரையும் நியமிக்கப்பட்டு வேலைசெய்துவருகிறார்.

ஸ்ரீ மயிலுப்பிள்ளைச்சிருப்பர்:—இவர்களுடைய மானிப்பாய்வெள்ளிக்கிழமை மடத்து வித்தியாசாலையில் சைவப்பிரசங்கஞ் செய்விக்கிறதற்காகச் சை. ப சபைக்கு ரூபாஐந்து இவ்வருடத்துக்காக அனுப்பியிருக்கிறார்கள்.

இருதலைக்கோழி:—ஒருடலும் இரண்டுதலையுமுடைய ஒருகோழிக்குஞ்சு இன்று நமது யந்திரசாலைக்குக் கொண்டுவரப்பட்டது.

இரேகுத்தலைவர்—மெஸ். லீத்துரை இவ்வூரிலுள்ள ரேகுகளைப் பார்க்கிறதற்காக வந்திருக்கிறார்.

திருக்கேதீச்சரமும் அந்தியேட்டியும்:—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப்பெருமானவர்களுடைய தமையனாரவர்கள் ஆராய்ச்சியார் ஸ்ரீ கந்தப்புப்பிள்ளை அவர்களுக்குச் சென்ற ௧௨ உ வெள்ளிக்கிழமை திருக்கேதீச்சரத்திலே அந்தியேட்டியாதிய அபரக்கிரியைகளும், பலஏழைகள் மனங்குளிர அன்னதானமுஞ் செய்யப்பட்டன. இந்தக்ஷேத்திரம இப்படிப்பட்ட கிரியைகளுக்கு நல்லவசதியான இடமாயிருக்கின்றது. கிரிமலைக்குப்போய்வருகிறதுபோலயாரும் போய்வரலாம்.

எளியசெய்கை:—சென்ற காலைந்து தினங்களாக, கத்தோலிக்குக் கிறீஸ்தவரிருக்கும் தெருக்களிலே தனித்துச்செல்லும் சிலசைவரை அக்கிறீஸ்தவர்கள் பயமுறுத்துகின்றார்களாம். யாழ்ப்பாணநாடு கத்தோலிக்கராதுசுப அரசுநாடெனஎண்ணினர்போலும்.

மன்மதவருஷவாக்கியபஞ்சாங்கம்:—இரகுநாதையா சோதிடப்பரிபாலன மடத்தாரால் கணிப்பித்து வெளிப்படுத்தப்பட்ட இப்பஞ்சாங்கம் வெளிப்பட்டுவிட்டது. நமக்கனுப்பியபிரதி கிடைத்தது.

வித்தியாசாலை:—ஸ்ரீமான். சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களுடைய ஏழாலை வித்தியாசாலையில் மாணவர்கள் சிலர் சென்றவாரத்திலே அவர் சகோதரர் ஸ்ரீ சி. வை சின்னப்பாப்பிள்ளையவர்களாற் பரீக்ஷிக்கப்பட்டார்கள்.

லகுலேகவரவு:—தூத்துக்குடிச் சைவ சித்தாந்தசபையாரனுப்பிய "சைவசித்தாந்த சாத்திரபோதம்" "இந்துவுககோரிதோபதேசம" என்னும் லகுலேகங்களிற் சிலபிரதிகள் வரப்பெற்றோம.

மல்லாகம்பொலிஸ்கோடு:—மெஸ். உஆட்டவுஸ்துரை காலிக்குப்போகாது நிறுத்தப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டு நீதிபதியும ரேகுத்தலைவருமாக, ஊர்காவற்றுறைநீதிவான் ஸ்ரீ கதிரவேற்பிள்ளையே மல்லாகம் கோட்டுக்குப் பொலீஸ்நீதிபதியுமாயினர்.

கீரிமலைப்பிரசங்கம்:—சென்ற சிவராத்திரி புண்ணியகாலத்திலே கீரிமலையிலே ஸ்ரீ. சு. கதிரவேற்பிள்ளைச் சிருப்பரவர்களுடைய மடாலயத்திலே சைவபரிபாலன சபைப்பிரசாரகர்களாகிய ஸ்ரீ. ஏரம்பையர், சதாசிவக்குருக்கள், குமாரசாமிப்புலவர், சரவணமுத்துப்பிள்ளை என்பவர்களாற் சைவப்பிரசங்கமும, வேறுபலராற் புராணதேவாரப் பிரசங்கமும், செய்யப்பட்டன. சிருப்பரவர்கள் பிரசங்கஞ்செய்தற்கேற்ற வசதியுஞ்செய்து உபசரித்துப் பிரசங்கம் முடிவுவரையுங்கேட்டுச் சம்மானித்தார்கள். தீர்த்த ஸ்நானத்துக்கு வந்தோர் வேறும்பலர்கேட்டனர்.

"கோட்டுப்புலிச்சட்டம்" (Trout Ordinance)

மிருசுவில் ஆயக்காரனுக்கு ஒருவண்டிக்காரன் காசுகொடாமல் மறைவாகவந்ததறகாக அவனை ஆயக்காரன்பிடித்து விதானைவசங்கொடுத்துச் சாவகச்சேரிக்கோட்டுக்குக்கொண்டுவரும்பொழுது காவெட்டி சிற்றம்பலம் கந்தர் என்பவர் வழக்காளிக்கும் விதானைக்கும் ஏதேன்கொடுத்துச் சமன்செய்யுமாறு எதிரியுடன் சமாதானம்பேசி நிற்குஞ்சமயத்து, வேறுவழக்குமூலமாகச்சென்ற பொலிசு No.100. N.No.44ஐயுடைய ஜோன்பிள்ளையென்பவர் கந்தரைப் பிடித்து சாவகச்சேரிக்கோட்டில் அவன்மீது 1047 இலக்கத்தில் பிராதுகொணர்ந்தனர். சென்றஜனவரி மீ ௩௦ உ மெஸ் காசிச்செட்டியார் அதனைவிளங்கி எதிரிக்கு ஐந்துரூபா அபராதம விதித்தனர். அதில்பாதி கை பொலிசுக்கு அளிக்கப்பட்டது. கோட்டுப்புலிகளே அநியாயஞ்செய்யாதிருங்கள். கடி.

பின்காலறவெட்டிகள்:—மட்டைக்களப்பு கன்முனையிலேசிலர் இரண்டுமூன்றுமாடுகளின் பின்கால்நரம்பற வெட்டினதுமன்றி, ஒரு மாட்டைப்பிடித்துத் துண்டமபண்ணிப் பலகோணங்களிற்றூக்கி, இதன் சொந்தக்காரன் சிலநாட்களுள் இவ்வண்ணம் தண்டிக்கப்படுவானென்று எழுதியும் ஒட்டினார்களாம். இவர்கள் மனுஷர்தாமா?

சைவப்பிரசங்கம்:—கொழும்பில் ஸ்ரீ. தம்பையா முதலியார் சத்திரத்தில், சைவபரிபாலன சபையின் பிரசாரகரால், தை மீ ௨௯ உ மானுடப்பிறவியினருமையையும் அதனது நிலையாமையையும் பற்றியும், மாசி மீ ௭ உ மகாசிவராத்திரி மகத்துவத்தையும் அனுட்டிக்கும் முறையையும் பற்றியும், ௧௨ உ சிவபுராணமான்மியத்தைப்பற்றியும், மிகவிரிவாய்ப் பிரசங்கஞ் செய்யப்பட்டது. அதவன்றியும், மகாசிவராத்திரியில் கொச்சிக்கடைச் சிவன்கோவிலில் கந்தபுராணத்தில் அடிமுடிதேடுபடலம் வாசித்துப்பொருள்சொல்லவும்பட்டது. கடி.

பெருந்தீ:—லந்தபுரியிலே கப்பல்செய்யும் இடத்திலே பெருந்தீமூண்டு சில உருக்களிற்றுவியதுமன்றி கட்டடங்கள் சிலவற்றையுந் தகித்தது. பொருளகட்டமதிப்பு ௪௦,000 பவுண்.

சீனயப்பானியசண்டை:—இன்னுமோர் முடிவுகாணாது நடந்துகொண்டிருக்கும் இச்சண்டையினால் சீனர்பாடுபெரும் நஷ்டமாகிறது. சப்பல்தாசக்கலங்களான தோர்பிடோக்கள் என்னுங் கலவருக்களிற் பத்து யப்பானியர் கைக்காயின. ஆழ்ந்தனவாம். சண்டைக்கப்பல்கள் இரண்டைக் கப்பலநாச வுருக்கள் ஆழியுட் புகுத்தின. யப்பானியரின் குண்டுகள் கோட்டைகள் இரண்டைத்தகர்த்தழித்தன. நட்டம் வரவரச் சமாதானத்துக்கு யோசியப் பட்டனர். இன்னும் அதனைக் கண்டுபிடிக்கவில்லை. சீனர் தாழத்தாழ யப்பானியர் உச்சத்திற்கிளம்புகிறார்.

கடிதம்.

பிரபஞ்சவிசாரம்.

(மாயாவாதிமதமறுதலை)

௫௪-ம் பக்கத்தொடர்.

அற்றன்று: மாயையென்பதோர் பொருளில்லை; அஃதோர் இல்பொருளே. இந்த இல்பொருளிலிருந்த பிரபஞ்சமாகிய இல்பொருள் தோன்றிற்றெனபீரேல், இது மலடிமகன் முயற்கோடு பிடித்தான் என்பதுபோலும் ஓர் ஆபாசமமே. இல்பொருள் என்பது சூனியம். இந்தச்சூனியத்துக்குத்தோற்றம் யாண்டையதோ? பிரபஞ்சம் இல்பொருளாமென்றால், அது தோற்றுதென்றல் யாங்ஙனமாமோ? அதனதோற்றமும், பிறிதோர் இல்பொருளிலிருந்தாமென்றால, இது நியாய கெதிக்கு ஒப்பதெப்படியோ? இல்பொருள் தோன்றுதலும், அதனுக்குப்பிறிதோர் இல்பொருள் ஆதாரமாதலும் ஆமைக்கயிறுகொண்டு அந்தரக்கோட்டை சமைப்பதோடொக்குமென விடுக்க. இல்பொருளுக்குத் தோற்றமில்லையாமெனில், கனுத்தோற்றங்கள் தோற்றி அழியுமாறெங்ஙனம எனவருவீராயின்; இன்னோரன்ன நியாயத்துறைகளை உள்ளபடி உற்றுநோக்காது சொன்மாத்திரையிற் றாக்கிநின்று உலைவதனாலன்றோ நமது மாயாவாதிகள் மயக்குற்றழிவது? கனுக்காட்சிகள், நம்மால் நிகழும் ஓர் விபரீதக்காட்சியேயன்றி, அக்காட்சிக்கண் நிகழுந்தோற்றங்கள் உண்மையளவிற் றோற்றுவனதாமோ? இல்லை. இல்லை. அவை எல்லாம எமது மனத்தின்கண் நிகழும் நினைவு ஒப்ப ஒருவகைநினைவேயாம். அவற்றுக்குத் தமக்கெனவோர தோற்றமுமில்லை, நாசமுமில்லை. இவற்றை ஓர்பொருள் என மதித்தலும், அவற்றுக்குத்தோற்றங்கூறபித்தலும் பித்தாட்டமேயாம. ஆகவே இல்பொருள் தோன்றும் என நமது நண்பர் மயங்குவது அவரகளது பிராந்தியே என முடிக்க. பிரபஞ்சமும் இங்ஙனம்ம ஓர விபரீதக் காட்சியே என்பீராயின, அஃதல், அதனை இல்பொருளெனக்கூறும கூற்றை இக்கணத்திறன்றே மறந்துவிடுக. மறந்து விபரீதக்காட்சியே என்று கைமேற்றுக்கொள்க. பிரபஞ்சம விபரீதக்காட்சிதானோ என்பது பின்னர் ஆராயப்படும்.

